## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பணியமைப்பு—தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—பொதுப் பணிகள்—கல்வித் தகுதிகள்—பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இளங்கலை (ஓரியண்டல் கல்சர்) பட்டப் படிப்பினை தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் உள்ள அருங்காட்சியக காட்சிக் கூட விளக்குநர் (பொதுப் பிரிவு) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாகக் கருதி அங்கீகரித்தல்—ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் (அ.தொ.1) துறை

அரசாணை (நிலை) எண் 66

நாள் 19.4.2005.
திருவள்ளுவராண்டு 2036
பார்த்திப வருடம் சித்திரை 6

படிக்க:

1. அரசாணை (நிலை) எண் 441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 20.12.1993.
2. அரசுக் கடித எண் 29475/ஆர்/98—4, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 15.9.1998.
3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண் 5660/விமஅது—ஊ1/99, நாள் 28.11.2001.
4. அரசுக் கடித எண் 69318/ஆர்/2001—1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 19.12.2001.
5. அரசுக் கடித எண் 21200/அ.தொ.1/01 1, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 10.1.2002.
6. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண் 602/ஆர்.என்.டி—எப்1/2004, நாள் 26.2.2004.

******

ஆணை:

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரை, குழுத் தலைவராகக் கொண்டு இணைக் கல்வித் தகுதிக்கான குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் இளங்கலை (ஓரியண்டல் கல்சர்) என்னும் பட்டப் படிப்பு தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் உள்ள அருங்காட்சியக காட்சிக் கூட விளக்குநர் (பொதுப் பிரிவு) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாக கருதலாமா என்ற பொருள் பாரதிதாசன் பல்கலைக் கழகம் மற்றும் அருங்காட்சியகங்களின் ஆணையரின் கருத்துருக்களோடு 8.11.2001 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. இக்குழுக் கூட்டத்தில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இளங்கலை (Oriental Culture)பட்டப் படிப்பினை, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் உள்ள அருங்காட்சியக காட்சி கூட விளக்குநர் (பொதுப் பிரிவு) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாக கருதி பரிந்துரைக்கப்பட்டது. தற்போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இத்தீர்மானத்தின் மீது உரிய ஆணையினை வெளியிட்டு, அதன் நகலினை பெற்று அனுப்புமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

2. கொணும் இணைக் கல்வித் தகுதி நிர்ணயக் குழுவின் பரிந்துரையினை நன்கு பரி ந்த அரசு அப்பரிந்துரையினை ஏற்கலாம் என முடிவு செய்துள்ளது. அவ்வாறே நிர்வாணையக் குழுவின் தீர்மானத்தை ஏற்று பாரதிதாசன் பல்கலைக் கழகத்தா ழங்கப்படும் "இளங்கலை (ஓரியண்டல் கல்சர்)" "(B.A) (Oriental Culture)" படிப்பினை, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் உள்ள "அருங்காட்சியக காட்சி கூட விளக்குநர்" (பொது பிரிவு) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கு இணையாகக் கருதி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் வழங்கப்பட்ட பதவிக்கான விதித் திருத்தம் அரசால் தனியே வெளியிடப்படும்.

4. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண் 17372/ஆர்/2005–1. நாள் 12.4.2005 –ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பு.எ.இராமையா,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
குழு உறுப்பினர்கள், கல்வித் தகுதி நிர்ணய / அங்கீகரிக்கப்பட்ட குழு,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை 2.
இயக்குநர், அரசு அருங்காட்சியகம், சென்னை–2.
அனைத்து பல்கலைக் கழகங்கள்.
இயக்குநர், கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை–6.
இயக்குநர், தொழில் கல்வி அலுவலகம், சென்னை–25.
அனைத்து துறைத் தலைவர்கள்.

நகல்

அனைத்துச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை / உயர்க் கல்வித் துறை / பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
அனைத்துப் பிரிவுகள், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர்,
கல்வி மற்றும் வணிக வரி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.